Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 258

வெள்ளிக்கிழமை 11 ஓகஸ்ட் 2023

## அதிக மருந்துகள்: பறிபோனது உயிர்

யாழ்., ஓக. 11
அதிகளவான மருந்துகளை எடுத்துக் கொண்ட நபரொருவர், சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். இமையாணன் மேற்கை »11

## முல்லைத்தீவில் காற்றுடன் மழை

முல்லை. ஓக. 11
முல்லைத்தீவில் நேற்று மாலை கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது. முல்லைத்தீவு- »11

## டொலரின் பெறுமதி தொடர்ந்து ஏற்றம்

கொழும்பு, ஓக. 11
இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி தொடர்ந்து ஏற்றத்திலேயே »11

நாய் இழுத்துவந்த நிலையில்

## சிசுவொன்றின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 11
யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணைப் பகுதியில், உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலமொன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட »11

கொக்குத்தொடுவாய்

## 21ஆம் திகதியன்று புதைகுழி அகழ்வு?


முல்லைத்தீவு, ஓக. 11
கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளை எதிர்வரும் 21ஆம் திகதி மேற்கொள்வதென உத்தேசமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. »11

## நவீன அடிமைகளாகவே இன்றும் மலையக மக்கள்



மனோ எம்.பி. கவலை

கொழும்பு, ஓக. 11
நவீன அடிமைகளாகவே எமது மக்கள் இன்றும் வாழ்கிறார்கள். அனுதாபத்தைக் கோரவில்லை. எமக்கான »11



யாழ்ப்பாணத்தில்

## 69,113 பேருக்கு தண்ணீரில்லை!

நிலைமை மேலும் உக்கிரமாகும்

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 11**

**வறட்சி காரணமாக கடும் பாதிப்புகளை யாழ்ப்பாண மாவட்டம் சந்தித்துள்ள நிலையில், 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் குடிதண்ணீர் இல்லாமல் அல்லற்படுகின்றனர் என்று யாழ். மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.** »11

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் 40 கைதிகள் மட்டுமே சிறையில்

இராஜாங்க அமைச்சர் ஜயரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 11
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், சிறைச்சாலைகளில் 40 கைதிகள் மட்டுமே உள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் ஜயரத்ன தெரிவித்துள்ளார். »11

## யாழ்ப்பாணத்தில் வெப்பச் சாவு!

வடமராட்சி முதியவர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 11
அதிக வெப்பம் காரணமாக முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வல்வெட்டித்துறை »11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படங்கள்: ஐ.சிவசாந்தன்

நல்லூர்ப் பெருந்திருவிழா

## பண்பாட்டுமுறையில் காளாஞ்சி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நடப்பட்டு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி ஒற்றைத் திருக்கை மாட்டு வண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதன்போது கலாசாரமுறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

அதேவேளை ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-27)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பறத்தின் பீடம் நேற்றுக் காலை பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பக்தர்களால் இழுத்துவரப்பட்டு ஆலய சப்பறத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டது. (ச)
படம்: ஐ.சிவசாந்தன்

# வைப்புநிதி குறைப்புக்கு எதிரான மனு நிராகரிப்பு



கொழும்பு, ஓக.11

**சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கடன்கள் பத்திரங்கள் மற்றும் திறைசேரிகளில் முதலீடு செய்யப்பட்ட ஊழியர்களின் வருங்கால வைப்புநிதியின் வட்டியைக் குறைக்கும் தீர்மானத்தை இடைநிறுத்த வேண்டும் என்று ஊழியர்களுக்கு இடையிலான நிறுவனங்களின் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.**

எஸ்.துரைராஜா, மஹிந்த சமயவர்தன மற்றும் குமுதுனி விக்கிரமசிங்க ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த அடிப்படை உரிமை மனு பரிசீலிக்கப்பட்டது.

அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா, மனுதாரர்கள் சங்கம் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள பெயருக்குப் பதிலாக வேறு பெயரில் மனுவை சமர்ப்பித்துள்ளதால் அதைச் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த மனுவின் உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன, இந்த விவகாரம் தற்போது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகிறது, இந்த விவகாரம் நாடாளுமன்றத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டதால் உயர் நீதிமன்றம் இதில் தலையிட முடியாது. இந்தப் பூர்வாங்க ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்டு மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கோரிக்கை விடுத்தார்.

மனுதாரர்கள் சங்கம் சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி நைகல் ஹறஜ், இந்த முடிவால் ஊழியர்களின் வருங்கால வைப்புநிதியத்தின் இலட்சக்கணக்கான உறுப்பினர்கள் தமது வாழ்நாளில் திரட்டிய பணத்தை இழக்கும் அபாயம் உள்ளது. இதனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் பொது நம்பிக்கை கொள்கையின்படி இது மீறல். இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் - என்றார். இரு தரப்பு உண்மைகளையும் பரிசீலித்த உயர்நீதிமன்றம், மனுவை விசாரிக்க மறுத்து உத்தரவிட்டது. (எ-இ)

## விளையாட்டு விழா

அச்சுவேலி, ஓக. 11

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் கஜமுகன் அரிச்சுவடி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அதிபர், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் செயலாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-ரி3,9)

## மின்சாரசபையிடம் திறனற்ற முகாமை

ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 11



இலங்கை மின்சாரசபையை சிறப்பான முறையில் கொண்டு செல்வதற்கு மின்சாரசபையை சீரமைக்கத்தேவையில்லை. சிறந்த நிர்வாகமே தேவைப்படுகிறது-இவ்வாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மின்சாரசபையின் திறனற்ற முகாமைத்துவத்தின் காரணமாகவே மின்சாரசபைக்கு பில்லியன் கணக்கில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே மின்கட்டணத்தை 300 வீதமாக அதிகரிக்க வேண்டியேற்படும் மக்கள் நெருக்கடியில் தள்ளப்பட்டனர்.

முகாமைத்துவத்தின் சீர்கேட்டுக்கு உதாரணமாக தென் மாகாணத்துக்கான மின்விநியோகம் எடுத்துக்காட்டு. தென்மாகாணத்துக்கான மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய மின்சாரசபையால் முடியவில்லை. தென்மாகாணத்துக்கான மின்சாரம் 650 மீற்றர் தூரம் தனியார் காணி ஊடாகவே கிடைக்கிறது. அதனால் 9 மில்லியன் அந்தக் காணி உரிமையாளருக்குச் செல்கிறது. மின்கட்டண அதிகரிப்பு சுயாதீனமான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது - என்றார். (ச-6)

# கடன்சீரமைப்பு யோசனையை சவாலுக்குட்படுத்த முடியாது!

சபாநாயகர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.11

தேசிய கடன் மறுசீரமைப்பதற்காக செயற்படுத்தப்படும் யோசனையை எந்தவொரு நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற நடைமுறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு எதிராக, எந்தவொரு வகையிலும் உத்தரவு அல்லது தீர்ப்பை வழங்குவதற்கு இலங்கை அரசமைப்பின்கீழ்நிறுவப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்துக்கும் அதிகாரம் இல்லை.

அவ்வாறான எந்தவொரு உத்தரவும் அல்லது நீதிமன்றத் தீர்ப்பும் அரசமைப்பு மீறலாக அமையும். அரசமைப்பின் 148 ஆவது பிரிவுக்கு அமைய, அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு நாடாளுமன்றத்தின் வசம் காணப்படுகின்றது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டமானது அமைச்சரவையால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு, நாடாளுமன்ற அரச நிதி தொடர்பான செயற்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், 2023 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த யோசனையானது உயர் நீதிமன்றத்தில் அல்லது 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசமைப்பின் கீழ் நிறுவப்பட்ட வேறு எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்த, மறுபரிசீலனை செய்ய அல்லது சவாலுக்கு உட்ப[illegible] முடியாது என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் மருத்துவமனைக்கு ஜப்பானின் அம்புலன்ஸ்கள்

## தூதுவரே நேரில் வந்து கையளிப்பு



யாழ்ப்பாணம், ஓக.11

**ஜப்பான் மக்களின் அன்பளிப்பில் வழங்கப்பட்ட 2 அம்புலன்ஸ்கள் மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு நேற்று வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.**

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் எச்.இ.மிசுகொசி மற்றும் அவரது தூதரக அதிகாரிகள் பங்கேற்று அவற்றை மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளித்தனர்.

இதன்போது மூளாய் கூட்டுறவு மருத்துவமனையினரால் தூதுவருக்கு யாழ். இசைக் கருவி நினைவுச் சின்னமாக வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து மருத்துவமனையின் செயற்பாடுகளைக் கேட்டறிந்த தூதுவர், தனது வருகையின் ஞாபகார்த்தமாக மரமொன்றையும் மருத்துவமனை வளாகத்தில் நட்டார்.

நிகழ்வில் மூளாய் கூட்டுறவு மருத்துவமனையின் பணிப்பாளர் சபையினர், பணியாளர்கள், சங்கானைப் பிரதேச செயலர், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

(ச-125)

*போதைக்கு அடிமை:*

## கள்ளப்பாட்டில் நால்வர் கைது!



முல்லைத்தீவு, ஓக. 11

முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை நால்வர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களை மருத்துவப் பரி சோதனைக்குட்படுத்தியபோது கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனத் தெரியவந்துள்ளது. அதனையடுத்து நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-ரி2-19)

## ஆணின் சடலம் காரைநகரில் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

காரைநகரில் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. 42 வயதான ஆண் ஒருவரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

(ச-27)

## ஜப்பானின் இலவச உரம் வடக்கில் நேற்று விநியோகம்

கிளிநொச்சி, ஓக. 11

ஜப்பானிய மக்களின் நிதிப்பங்களிப்பில் இலவச உரம் வழங்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மற்றும் கண்டாவளை கமநலசேவை நிலையத்தில் வைத்து உர விநியோகம் நேற்று நடைபெற்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தொல்புரம் கமநல சேவைகள் நிலையத்துக்கு 2 ஆயிரத்து 935 உர மூடைகள் விநியோகிக்கப்பட்டன. சங்கானைப் பிரதேசத்தில் 30 பரப்புக்குட்பட்ட 573 விவசாயிகளுக்கு 25 கிலோகிராம் உரமும் 30 முதல் 60 க்கு இடைப்பட்ட பரப்பைப் கொண்ட ஆயிரத்து 789 விவசாயிகளுக்கு 50 கிலோ உரமும் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ச-ரி3-113,125)

*அரசசார்பற்ற நிறுவனங்கள்*

## மக்கள் நலப் பணிகளுக்காக ரூ. 930 மில்லியன் ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்.மாவட்டத்தில் சுமார் 930 மில்லியன் ரூபா செலவில் மக்கள் நலன்சார் செயற்றிட்டங்கள் இந்த வருடத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்படவுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அரச சார்பற்ற நிறுவனங்களுடன் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது அரசசார்பற்றநிறுவனங்களால் இந்த வருடம் மக்கள் நலன்சார் செயற்றிட்டங்களுக்காக அண்ணளவாக 930 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது.

அதன்போது யாழ்.மாவட்டச் செயலர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். அதற்கான நிவாரணங்களை மக்களுக்கு வழங்குவதற்கு முன்வரவேண்டும். அத்துடன் கற்றல் உபகரணங்களுக்கான விலைவாசி உயர்ந்துள்ளதால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை உறுதிசெய்ய கற்றல் உபகரணங்கள் வழங்குதல் சிறந்தது எனவும் வலியுறுத்தினார்.

(ச-125)




ஆக்கிறதை விடவும் அதை அழிக்கிறதில எங்கட ஆக்களை ஆரும் மிஞ்சேலாது. அதோட எந்த ஒரு வேலையைச் செய்யக்கூடாது எண்டு ஆரும் அட்வைஸ் பண்ணினால், முதல்வேலையா அதைச் செய்யிறதிலையும் நாங்கள் வலு விண்ணர்.

இப்ப கடும் வெக்கைகாலம். எல்லாரின்ர தலையிலையும் தனித்தனிச் சூரியமண்டலம் இருக்கிற மாதிரி வெக்கை. இந்த வெக்கையால இலங்கையிலயே யாழ்ப்பாணம் தான் கூடுதலாப் பாதிக்கப்பட்ட பிரதேசம் எண்டும் அறிவிச்சிருக்கினம். இந்தப் பாதிப்பு இன்னும் கூடாமல் இருக்கவேணுமெண்டா சில நடைமுறையளைப் பின்பற்றச் சொல்லி விசயம் தெரிஞ்சவை சொல்லிக்கொண்டு வருகினம். கஞ்சல் குப்பையளுக்கோ, வயலுக்கோ நெருப்பு வைக்கவேண்டாம் எண்டது அப்பிடிப் பின்பற்றச் சொன்ன நடைமுறையளில ஒண்டு. ஏனெண்டால் வெக்கையோட இடைக்கிடை கடும் காத்தும் அடிக்குது. வெக்கையும் காத்தும் சேர்ந்தால் சும்மா புகையிற சின்னப் பொறியைக்கூட பெரிசாப் பத்த வைச்சிடும். இதாலதான் கிட்டடியில பூநகரி - முக்கொம்பன் பக்கமா காட்டுத்தீ மூண்டுநாளா மூசி எரிஞ்சது. அதைக் கட்டுப்படுத்த அங்கத்தைச் சனமும் பிரதேசசபையும் பட்டபாடு கொஞ்சநஞ்சமில்லை.

அதேமாதிரி யாழ்ப்பாணத்திலையும் நெருப்பால பெரும் அசம்பாவிதம் ஏதும் ஏற்படுறதுக்கான அறிகுறியள் சில தற்குறியளால உருவாகியிருக்கு. இவ்வளவுநாளும் சும்மா இருந்திட்டு இப்ப வெக்கை கிளம்பினவுடன வேலணைப்பக்கமா இருந்த காணிப் புல்லுகளுக்கு நெருப்பு வைச்சு, அது பத்தியெரிஞ்சதில நாலைஞ்சு வருசமா பாடுபட்டு வளர்த்த மரங்கள் எல்லாம் கருகிப் போட்டுது. அதெல்லாம் பேப்பரிலயும் வந்து, இனியாவது கொஞ்சம் திருந்தி நடவுங்கோ எண்டு, எல்லாரும் அட்வைஸ் சொன்னவை. நீங்கள் எதையும் சொல்லுங்கோ, நாங்கள் இப்பிடித்தான் செய்வம் எண்டமாதிரி உந்த வயல் கொளுத்திற விளையாட்டு தொடரத்தான் செய்யுது. இப்ப வயலுகள் எரியிறது வேலணையில இல்லை. வல்லை வெளியில. அதுவும் இதுவரைக்கும் நெல்லே முளைக்காத வயல்களுக்கு எல்லாம் நெருப்பு வைச்சு, அந்த வெளிக்குள்ள நட்டுப் பராமரிச்ச நாவல்மரம், புளியமரம் எண்டு சிலதைப் பொசுக்கிப் போட்டாங்கள். இப்பவும் உந்த வயல் எரிப்பு ஒவ்வொருநாளும் நடக்கத்தான் செய்யுது.

வல்லைக்குள்ள வயல் எரிப்பெண்டால், தென்மராட்சிப்பக்கம் இதுதான் சாட்டெண்டு காணியளுக்க நிக்கிற பனைமரங்களுக்கு நெருப்பு வைக்கிற சேட்டையும் நடக்குது. இந்தப் பனையளுக்கு வெளியாக்கள் வந்து நெருப்பு மூட்டுறேலை. அந்த வளவுக்காரர் தான் களவா நெருப்பை வைச்சிட்டு, பனை எரிஞ்சிட்டு எண்டு சாட்டுச் சொல்லி அதைத் தறிக்கினம். இல்லாட்டி பனையைத் தறிக்க லேசில பெர்மிசன் கிடைக்காது. அதுக்காகத்தான் இப்பிடி எரிச்சு விளையாடுகினம். நெருப்போட விளையாடினால் வினையாத்தான் முடியும். அதுவும் இப்ப இருக்கிற கிளைமேட்டுக்கு நெருப்பு என்னென்ன வினையெல்லாம் வைச்சுச் செய்யப் போகுதோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி அமாவாசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஓக. 11

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆடி அமாவாசை வழிபாடுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகள் நடைபெற்று காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தீர்த்தவாரியும் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணி முதல் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் பிதிர்த்தர்ப்பணங்களை அடியவர்கள் நிறைவேற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3)

காரைநகரில்

## சட்டவிரோத மீன் சந்தையை அகற்ற பொலிஸார் தயக்கம்?

காரைநகரில் புதிய மீன்சந்தைக் கட்டடத் தொகுதி அமைத்துக் கொடுத்தும் அதில் வியாபாரத்தில் ஈடுபடாது தனியார் காணியொன்றிலேயே மீன்சந்தை தற்போதும் சட்டவிரோதமாக இடம்பெறுகிறது. அதனை அகற்றுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

காரைநகரில் பிரதேசசபையின் நிதியுதவியில் புதிய மீன்சந்தைக் கட்டடம் சக்கலாவோடைப் பகுதியில் இந்த வருடத் தொடக்கத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இந்தக் கட்டடத் தொகுதிக்கு இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்தபோதும் மீன்வியாபாரிகள் ஆலடிப் பகுதியிலுள்ள காணியிலேயே தொடர்ந்தும் மீன்வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்தநிலையில் காரைநகர் பிரதேச சபை இதுதொடர்பில் கவனம் செலுத்தி சட்டவிரோதமாக இயங்கும் மீன்சந்தையை அகற்றுமாறு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் அண்மையில் முறைப்பாடளித்தது.

அத்துடன் காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரால் ஆளுநர், பிரதம செயலர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

ஆயினும் இதுவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றஞ்சுமத்தப்படுகிறது.

இதுகுறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் தலைமை அதிகாரியை தொடர்பு கொண்டு கேட்டபோது.

இந்தவிடயம் தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது. நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ச-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளி[illegible] கூடுதல்கவனம்தேவைப்படும்நாள். சிறிய[illegible]வில் உடல்நலம் பாதிக்கப்படலாம். கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பாக முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் கூடும்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு

**கும்பம்:** சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது.

## கைதடி குருசாமி வித்தி வருடாந்த பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

கைதடி குருசாமி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக்கல்வி கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர், வரணி ஆசிரியர் வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-ரி3-159)

யாழ்.நகரில்

## சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்குச் 'சீல்'



யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்.நகரப் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் இயங்கிய இரண்டு உணவகங்களை 'சீல்' வைத்து மூடுமாறு யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்று நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

யாழ்.நகரிலுள்ள உணவகங்கள் அண்மையில் யாழ். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது யாழ். பஸ் நிலையத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள உணவகமொன்றும் பண்ணைப் பகுதியில் அமைந்திருந்த உணவகமொன்றும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை அவதானிக்கப்பட்டது. அதனையடுத்த உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிவான், குறித்த உணவகங்களின் குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படும் வரை 'சீல்' வைத்து மூடுமாறும் உரிமையாளரை தலா ஒரு லட்சம் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் உத்தரவிட்டார். (ச-ரி2-இ)



## சிறுவர் காப்பகங்களில் இனிக் கண்காணிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களை உரிய கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது.

சிறுவர் காப்பகங்களின் சீர்கேடுகள் தொடர்பான செய்திகள் அண்மைக் காலமாக வெளிவருகின்றன.

சிறார்களைக் காத்து, அரவணைத்து, ஆதரவு கொடுப்பதற்காகவே சிறுவர் காப்பகங்கள் உருவாக்கப்பட்டன.

ஒரு சில காப்பகங்களில் சீர்கேடுகளும், அநியாயங்களும் இடம்பெறுகின்றன.

சில சிறுவர் இல்லங்கள் மாவட்டச் செயலக அதிகாரிகளின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பதில்லை என கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய சிறுவர் காப்பகங்கள் மீதான கண்காணிப்பை அதிகரித்து, அவர்களின் நலன் பேணுகையை உறுதிசெய்ய முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ச-125)

## வாகன இலக்கத்தகடு பட்டியல் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 11

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்துக்கு வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தப் பட்டியல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டச் செயலக இணையத் தளத்திலும் அதனைப் பார்வையிடலாம்.

புதிய வாகனப் பதிவு உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஓட்டும்தாள் என்பவற்றையும் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3)

## வட்டுக்கோட்டையில் நாடக ஆற்றுகைகள்

காரைநகர், ஓக. 11

காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நாடக ஆற்றுகை நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்பாகவுள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது செம்முகம் ஆற்றுகைக் குழுவின் 'எலியார் எங்கே போனார்?', 'சிமாகாவின் கனிந்த இரவு' ஆகிய நாடக ஆற்றுகைகள் அரங்கேற்றப்படவுள்ளன. (ச-ரி3-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீர்வுக்கான தெரிவை தமிழர்களிடம் விடுங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட எந்தவொரு தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் இனப்பிரச்சினைக் குத் தீர்வு காணப்படவேண்டும் என்ற அரசியல் விருப்பு இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, '13' தொடர் பில் நாடாளுமன்றத்தில் முன்வைத்த யோசனைகளை மேலோட்டமாகப் பார்த்தால் அரசியல் தீர்வுக்கான முன் முயற்சியாக அதுதோன்றும். ஆனால் கள யதார்த்தம் அது வல்ல. '13 'தொடர்பில் சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டிய விவகாரத்தைக்கூட சிக்கலாக்கி, தீர்க்க முடியாத எல்லைக் குள் தள்ளியிருக்கின்றார். அரசமைப்பில் உள்ள விட யத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி தேவையில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதி பதியாக அதனை அவர் செய்திருக்க முடியும். ஆனால் ஜனாதிபதியோ, நாடாளுமன்றத்தின் பக்கம் அதைத் திசை திருப்பி விட்டிருக்கின்றார். நாடாளுமன்றத்தில் அட்சர கணிதத்தின் பிரகாரம் சிங்களவர்களே பெரும்பான்மை யினர். அவர்களைப் பொறுத்தவரையில் '13' தொடர்பில் சாதகமான நிலைப்பாடு கொண்டுள்ளோர் வெகுசிலரே. எனவே நாடாளுமன்றத்தில் '13' தொடர்பில் சரியான தீர்மானம் எட்டமுடியாது. நாடாளுமன்றம் '13 ' தொடர் பில் குழம்பிக் கொண்டிருக்க, ஜனாதிபதி ரணில் அதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கப்போகிறார். அவரது தேவை முழுவதுமே, ''அரசியல் தீர்வு தொடர்பில் சர்வ தேசசமூகம் உட்பட எந்தவொரு தரப்பும் தன்னை நோக்கி விரல் நீட்டக்கூடாது. இனி எல்லாத் தரப்புகளுக்கும், நான் நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்துவிட்டேன். அவர்கள் தான் ஒரு தீர்வுக்கு வருகின்றார்கள் இல்லை'' என்று சாக்குப் போக்குச் சொல்ல நல்ல வாய்ப்புக் கிடைத்துவிட்டது. இப்போதுள்ள நாடாளுமன்றத்தில் எந்தவொரு தரப்பும் தனிப்பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை. அதனால் நாடாளுமன்றமும் '13 'தொடர்பில் உருப்படி யான – உறுதியான தீர்மானத்தை எடுக்கப்போவ தில்லை.

ஆனால் அரசியல் தீர்வு தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கு அக்கறையிருக்குமாக இருந்தால் அது தொடர்பில் நாடாளுமன்றத்தைத்தாண்டி மக்களிடம் கருத்துக்கேட் பதே பொருத்தமாக இருக்கும். இந்த நாட்டில் இனப்பி ரச்சினை இருக்கின்றது என்றும் அதனால் பாதிக்கப்படு கின்றோம் எனவும் தமிழர் தரப்புத்தான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றது. இன்று வரையில் தமிழர் தரப்பை மையப்படுத்தியே இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப் பட வேண்டும் என்ற அழுத்தமும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தால் இலங்கை அரசாங்கத்தின் மீது ஏற் படுத்தப்பட்டு வருகின்றது. எனவே இனப்பிரச்சினை யைத் தீர்க்கவேண்டும் என்று அரசியல் விருப்புடன் செயற்படும் தரப்புகள், தமிழ் மக்களிடமே தீர்வுக்கான தெரிவை விட்டுவிடவேண்டும்.


நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதன் பின்னர் நேற்றுமுன்தினம் உரை யாற்றிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகிய இருவரும் இந்த விடயத்தைத் தெளிவாகவே சுட்டிக்காட்டி சவால் விடுத்துள்ளனர். தமிழ் மக்களுக்கு 13ஆவது திருத்தமா? சமஷ்டியா? தனிநாடா? எது தேவை என்பதை சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அறிந்து கொள்ளுங்கள் என்றும் அவ்வாறு வாக்கெடுப்பு நடத்துவதற்குத் தயாரா? என்றும் சவால் விடுத்துள்ளனர். தமிழ் மக்களிடம் கருத்துக் கணிப்பு பொதுவாக்கெடுப்பு நடத்துவதே இனப்பிரச் சினைக்குரிய இறுதித் தீர்வுக்கான உறுதியான வழியாக இருக்கும்.

ஏனெனில் 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தத்தை தமிழர் தரப்புகள் ஏற்றுக்கொள்ள வில்லை. அவர்களின் ஆதரவில்லாமலேயே அது நிறை வேற்றப்பட்டது. இப்போதும் அந்தச் சட்டத்தின் நடை முறையாக்கம்பற்றியே பேசிக் கொண்டிருகின்றோம் என்றால் அந்தச் சட்டத்தால் எந்தவொரு முன்னேற்றமும் இல்லையென்பதே அர்த்தம். எனவே அர்த்தமுள்ள அர சியல் தீர்வுக்கு தமிழ் மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத் துவதே பொருத்தமாக இருக்கும். தமிழ்த் தரப்புகள் ஒன் றிணைந்து அதை வலியுறுத்தி வலுப்படுத்த வேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை


"ஒருவனுடைய மனம் தூய்மையாக இல்லாவிட்டால் பணமோ, வலி மையோ, அழகோ அவனுக்குப் பயன் படாது"

– அரிஸ்ரோட்டில்



# தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்துவதற்கு தயாரா அரசு?

## நாடாளுமன்றில் சிறீதரன் கேள்வி



**கொழும்பு, ஓக.11**

**தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா, சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா என் பதை அறிய வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்தத் தயாரா? என்று ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.**

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன் றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினர். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஒன்று வரக் கூடாது என்பதே ஜனாதிபதியின் உரை யைத் தொடர்ந்து உரையாற்றியவர்களின் கருத்துக்களாகவுள்ளன. தமிழர்கள் தனித்துச் செல்ல விரும்புகிறார்களா, சமஷ்டி அடிப்படை யில் வாழ விரும்புகிறார்களா என்பதையறிய வாக்கெடுப்பை நடத்த அரசு தயாரா ? - என்றார். அதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் பிரச்சினை களுக்குத் தீர்வு காண நான் தயாராகவுள் ளேன், தமிழ் மக்களுக்கு என்ன தேவை என் பதை நான் அறிந்துள்ளேன்- என்று குறிப் பிட்டுள்ளார். (எ-இ)

## தீர்வுக்கான பேச்சுகளில் முஸ்லிம்களும் வேண்டும்!

### ரவூப் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, ஓக.11

13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட் டம் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் போது, முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தப்பட வேண்டும். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு, கிழக்கு தேர்தல் தொடர்பான விடயங்களை முன்வைக்கும்போது, முஸ்லிம்களும் அதில் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். இனப்பிரச்சி னைத் தீர்வு தொடர்பாக முஸ்லிம் பிர திநிதிகளுடனும் பேச வேண்டும். உங் களுடன் (ஜனாதிபதி) நேரடியாக இது தொடர்பில் பேச்சு நடத்துவோம் – என் றார். (எ-இ)

## இனப்பிரச்சினைக்கு சமஷ்டி மட்டுமே தீர்வு

### *முன்னணி ரணிலுக்கு கடிதம்*

கொழும்பு, ஓக.11

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தீர்வுக் கான ஆரம்பப் புள்ளியும் அல்ல, தீர்வும் அல்ல. அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே இனப் பிரச்சினை களைத் தீர்க்க ஒரே வழியாகும் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

1987ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்புகளால் 13ஆவது திருத்தம் நிராகரிக்கப்பட்டது. அதைத் தொடக்கப் புள்ளியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தலைவர் மு.சிவசிதம்பரம், செயலாளர் அமிர்தலிங்கம், உபதலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் கையொப்பம் இட்டு அப்போதைய இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியிருந்த னர் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது. (எ-இ)

**நாளை** **12.08.2023** சனிக்கிழமை ஆடி 27

சுபநேரம் : 03.04 – 04.34
ராகுகாலம் : 09.04 – 10.34

ஏகாதசிவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அதிகாரம் வழங்கினால் பௌத்த மரபுரிமைக்கு ஆபத்து

## வழக்கம் போல் குட்டையைக் குழப்புகிறார் வீரசேகர



கொழும்பு, ஓக.11

**பௌத்த மரபுரிமைகளுக்கு எதிர்மறையாக தமிழ்ப் பிரிவினைவாத அரசியல்வாதிகள் செயற்படும் போது 13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேச நாங்கள் விரும்பவில்லை. காணி அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: மாகாணசபை முறைமை வெள்ளையானை போன்றது. புதிய அரசமைப்புக்கே மக்கள் ஆணை உண்டு. ஆகவே மாகாணசபையை நீக்கி புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறேன். நான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை பார்வையிட்டுள்ளேன். பௌத்த தொல்பொருள் மரபுரிமை வாய்ந்த வவுனியாவில் வெடுக்குநாறிமலைப் பகுதியிலுள்ள பௌத்த மரபுரிமைச் சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. காணி அதிகாரம் வழங்காதபோது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மரபுரிமைகள் இவ்வாறு அழிக்கப்படும் போது காணி அதிகாரத்தை வழங்கினால் என்ன நேரிடும் என்பது கேள்விக்கிடமாகவுள்ளது. விடுதலைப் புலிகளின் ஆயுதமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது. 30 வருடகாலப் போரின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியாததை தற்போது தட்டில் வைத்து வழங்க முயற்சிப்பது முறையற்றது - என்றார். (எ-இ)

### பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஓக. 11

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அழகரட்ணம் மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-ரி2)

# இனவாதத்தை ஒழியுங்கள்; 'தெமலோவை' நிறுத்துங்கள்

## டயனா கமகே உருக்கம்

கொழும்பு, ஓக.11

நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் இனவாதத்தைத் ஒழிக்க வேண்டும். தமிழர்களை 'தெமலோ' என்று குறிப்பிடுவதன் ஊடாகவே இனவாதம் வெளிப்படுகிறது. தமிழர்களை 'தமிழர் அல்லது திராவிடர்'என்று அழைக்க வேண்டும். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

நாடாளுமுன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இனவாதம், மதவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்த காலம் முடிவடைந்து விட்டது. 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் அரசமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாத காரணத்தால் 30 வருடகாலப் போர் தோற்றம் பெற்று நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. முதலில் நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் முதலில் இனவாதத்தை இல்லாதொழித்து தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க வேண்டும். அப்போது தான் சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்கும். அடிப்படை விடயங்களில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்தினால் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தலாம் - என்றார். (எ-இ)

## காலநிலை பாதிப்பில்

# இலங்கை மூன்றாமிடம் முதலாமிடத்தில் வடக்கு

யாழ்ப்பாணம், ஓக. 11

காலநிலை பாதிப்புக்குள்ளான நாடுகளில் இலங்கை மூன்றாமிடத்திலுள்ளதுடன் வடக்குமாகாணம் முதலிடத்தில் உள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையில் இதனை அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலநிலை மாற்றத்துக்கான சர்வதேச அமைப்பின் அறிக்கையின்படி கடந்த ஆண்டில் காலநிலை பாதிப்புக்குள்ளான நாடுகளில் இலங்கை மூன்றாடமிடத்தில் உள்ளது.

வடக்குமாகாணம் முதலிடத்திலுள்ளது. வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் அதிகரித்த ஆவியாக்கம் போன்ற பாதிப்புக்களால் வடக்குமாகாணம் இந்த பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது. இலங்கைக்கு காலநிலை மாற்றமானது உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தை தணிக்கச் செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் பெரும் பேரிடரை நாம் எதிர்நோக்க நேரிடுவது நிச்சயமே - என்றார். (ச-27)

# மிருகவதை; மூவர் கைது!



கிளிநொச்சி, ஓக. 11

சுமார் 20 கால்நடைகளை பாரவூர்தியொன்றில் கால்நடைகளுக்கான உணவு மற்றும் சுகாதார வசதிகளின்றி அனுமதிப் பத்திரமின்றி ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகேந்திரபுரப் பகுதியில் வைத்து நேற்று வியாழக்கிழமை அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்தார். (ச-ரி2-113)

# ஜனாதிபதியின் செயற்பாடு இனமோதலை உருவாக்கும்

## எச்சரிக்கின்றார் ரதன தேரர்

கொழும்பு, ஓக.11

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான ஜனாதிபதியின் செயற்பாடுகள் மீண்டும் நாட்டில் இனவாத மோதல்களை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சியின் சுயாதீன அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர் எச்சரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும் விடயங்களின் பாரதூர நிலைமையை சபையில் உள்ளவர்கள் புரிந்து கொண்டுள்ளார்களா என்று தெரியவில்லை.

மில்லியன் கணக்கில் முதலீடுகளை மாகாணசபைகளுக்கு கொண்டு வரமுடியும் என்று கூறுகின்றார். இதன் ஆபத்துக்களை இந்தச் சபை சிந்திக்க வேண்டும் என்று கருதுகின்றேன். ஏதேனும் மாகாணத்துக்கென அவ்வாறு முதலீட்டை கொண்டுவர முடியாது. சீனாவை உதாரணமாக கூறியுள்ளீர்கள். அது தனிக் கட்சி நாடு. அங்குள்ள நிலைமை வேறு. அதை இங்கே ஒப்பிட முடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய சூழ்நிலை 50 வீதம் உள்ளது. மிகுதி 50 வீதத்தை நாடு முழுவதும் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாலே தீர்க்க முடியும்.

வடக்குக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போகின்றதா? 13 ஆவது திருத்தத்தை வழங்கியதும் யுத்தம் முடிந்துவிடும் என்று நினைத்தனர். ஆனால் போர் நடைபெற்றது. நாங்கள் மீண்டும் இனவாத போராட்டத்துக்குச் செல்லத் தயாராக இல்லை. நாட்டு மக்களுக்கு கோபத்தை உண்டாக்க வேண்டாம் - என்றார். (எ-இ)

# முதலில் மாகாணசபைத் தேர்தல் பின்னர் 13 தொடர்பாகப் பேசலாம்

## ரணிலுக்கு சஜித் ஆலோசனை



கொழும்பு, ஓக.11

மக்கள் ஆணைக்கு இடமளிக்க வேண்டும் என்றும் உடனடியாக மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 9 மாகாணங்களையும் இயங்கச் செய்து, அதன் உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி 13 ஆவது திருத்தத்தை செயற்படுத்தலாம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இப்போது எந்தவொரு மாகாணசபையிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. சர்வகட்சிக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை செயற்படுத்துங்கள். அரச தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம்.

இப்போது உங்களின் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உங்களின் யோசனைகள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி,

இந்த அரசமைப்பு திருத்தத்தை தருகின்றேன். அதை நிறைவேற்றுங்கள்.

சட்டங்கள் நிறைவேற்றுங்கள்.

திருத்தங்களைக் கொண்டு வரலாம்.

அவற்றை நிறைவேற்றிய பின்னர் தேர்தலை நடத்தலாம் என்று கூறுகின்றேன் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



'அலைபாடும் ஐரோப்பிய ஒன்றியம்' எனும் புலம்பெயர் தன்னார்வ அமைப்பால் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. (ச-ரி-125)




மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்துக்கு புதிய அதிபராக சொலமன் யேசுதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான வரவேற்பு நிகழ்வை பாடசாலையின் அபிவிருத்திச் சபையினர், பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தினர், நலன்விரும்பிகள் இணைந்து அண்மையில் மேற்கொண்டனர். (ச-131)



நாவற்குளி கோவிலாக்கண்டி செல்வா முன்பள்ளி சிறார்களின் மாதிரி சந்தை முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. (ய-9)

## உருவச்சிலை திறப்பும் நூல் வெளியீடும்





யாழ். இணுவில் இந்துக் கல்லூரி ஸ்தாபகர்களின் உருவச்சிலை திறப்பும் நூல் வெளியிடும் நிகழ்வும் கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை மேற்படி கல்லூரியில் நடைபெற்றது.

அதிபர் வே.உதயமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்லூரியின் நிறுவுநரும், சைவசித்தாந்தம், தமிழ் இலக்கண, இலக்கியப் புலமையாளருமான மகா வித்துவான் பொன். அம்பிகைபாகப் புலவர் மற்றும் கல்லூரியின் நிறுவுநரும், ஆறுமுகநாவலரின் வழியில் சைவத்துக்கும், தமிழுக்கும் தொண்டாற்றியவருமான பிரம்மஸ்ரீ முருகேசு ஐயர் வெங்கடாசல ஐயர் ஆகியோரின் உருவச்சிலைகள் சம்பிரதாயபூர்வமாகத் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவரும், சைவத்தமிழ் அறிஞருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட ஓய்வுநிலை பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, ஓய்வுநிலை ஆசிரியை பண்டிதை. திருமதி .வை.கணேசபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (ய-66)



## அன்பளிப்பு

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் தரம்- 7,8 இல் ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கிலமொழிமூல கணிதப் பயிற்சி நூல்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அத்துடன் யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். சென். சாள்ஸ் ம.வி. கணிதபாட ஆசிரியர்களான வி.குகநாதன், வ.பாலமுரளி ஆகியோரால் எழுதப்பட்ட ஒருதொகுதி பயிற்சி நூல்கள் நூலகத்துக்கும் அன்பளிப்பாக கல்லூரி முதல்வரிடம் கையளிக்கப்பட்டன. (ய)





பளை செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ய_9)

## செயற்படுவோம் மகிழ்வோம்

கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் "செயற்படுவோம் மகிழ்வோம்" விளையாட்டு நிகழ்வு பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.இரவீந்திரன், பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ய-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பயங்கரவாத நாடு என்கிறார் றோய் ரட்ணவேல்

சிங்கப்பூரிலிருந்து என்னைத் திருப்பி அனுப்பியதன் மூலம் இலங்கை ஒரு பயங்கரவாத நாடு என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கனேடிய தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் நன்கு அறியப்படுபவரான பொருளாதார நிபுணரான றோய் ரட்ணவேல் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்த றோய் ரட்ணவேல் 'கைதி எண் 1056' என்ற ஆங்கில நூலை ஜூலை 31ஆம் திகதி சிங்கப்பூரில் வைத்து வெளியிடத் தீர்மானித்திருந்தார். இவரை சிங்கப்பூர் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் விமான நிலையத்தில் தடுத்து வைத்து திருப்பி அனுப்பியுள்ளனர். பூஸா முகாமில் தான் அனுபவித்த சித்திரவதைகளை இந்த நூலில் விவரித்துள்ளார் றோய் ரட்ணவேல். ஆதலால் இலங்கை அரசாங்கத்தின் அறிவுறுத்தலின் பேரிலேயே றோய் ரட்ணவேல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- சிங்கப்பூர் போன்ற ஜாக்கிரதை உணர்வுள்ள நாடுகள் இலங்கையின் கோரிக்கைக்குச் செவிசாய்க்கும். அத்துடன், இந்தத் திருப்பி அனுப்பல் மூலம் இலங்கை ஒரு பயங்கரவாத நாடு என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது - என்றார். (ம - 6)


## நாகபூஷணி திருமணசேவை

**அனைவருக்கும் இலவசம்**

**12.08.2023 இருந்து 14.08.2023 வரையும்**

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## காணி விற்பனைக்கு

பளை நகரில் புலோப்பளையில் உள்ள காணியொன்றும் வயல்காணியும் விற்பனைக்குண்டு.

**077 932 5343**

(CS/516081)AH-1

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 581/58, 581/59 ஆதனத்தின் ஆதனப் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். கொழும்புத்துறையைச் சேர்ந்த யோசியாம்பிள்ளை டொமினிக் அல்லது யோசியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் யாழ் நொத்தாரிசு அ.மரியாம்பிள்ளை என்பவர் முகதாவில் 1973.03.19 ம் திகதி 412ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை 'அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்' என்னும் பெயருடைய ஆதனத்தின் விஸ்தீரணம் நெற்பரப்பு ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் என்பவர் முகதாவில் 2004.01.15 ம் திகதி 2015ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சவிரிமுத்து கிறிஸ்தோபர் காலமாகிவிட்ட எனது பெற்றோருக்கு ஏகவாரிசாக எனக்கடைந்த உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அற்றோணி திருமதி எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் என்பவர் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் என்பவர் முகதாவில் 2014.10.27 ம் திகதி 2213ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியா என்பவர் நொத்தாரிசு தே.சுபாஜினி என்பவர் முகதாவில் 18.08.2015ம் திகதி 176ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி குணசிங்கம் ஜெயராட் அமலதாசும் பெண் மேரி குளோரியா சுசிலாவிற்கு அறுதியாக விற்றுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை. **'அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்' என்று வழங்கும் 'கொழும்புத்துறைத் தெருத்தோட்டம்** நிலப்பரப்பு 375 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு நிலப்பரப்பு 376 குளி 12.8 இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு 222 குளி 3.92 இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088A/14ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 49 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 01 துண்டு 50 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 இவ்விரு துண்டுகளும் ஒன்று சேர்த்து நிலப்பரப்பு 2 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 21.12.2014 இல் வரைந்த முறையே 6088A – 49/14 ம் இலக்கத்திலும் 6088A – 50/14 ம் இலக்கத்திலும் அளந்த நில அளவைப்படங்களில் முறையே துண்டு 1 (lot 1) என சுட்டப்பட்டுள்ளது இந்த நிலப்பரப்பு இரண்டுக்கும் எல்லை

**கிழக்கு** - குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 48 என காட்டப்பட்ட ஆதனம்

**வடக்கு** - குறித்த ஆதனம் 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 45உம் துண்டு 46உம் என காட்டப்பட்ட ஆதனங்கள்

**மேற்கு** - குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 51 என காட்டப்பட்ட ஆதனம்

**தெற்கு** - ஆறு மீற்றர் அகலப்பாதை இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு தெற்கே உள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்

தற்போது இவ்வாதனத்தை குணசிங்கம் ஜெயராட் அமலதாசும் பெண் மேரி குளோரியா சுசிலா என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசிங்கம் ஜெயராட் அமலதாசும் பெண் மேரி குளோரியா சுசிலா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிகளை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR/40396)AH-1

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Call for Spoken Sinhala Teacher (Temporary Contract)

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. The explosive ordnance contamination is a result of over three decades of civil war that ended in 2009. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

In preparation for Sri Lanka reaching mine-free status, HALO and other mine action operators have developed a Staff Livelihood Transition Strategy (SLTS), designed to build staff resilience and vocational skills. As part of the strategy, HALO plans to deliver Spoken Sinhala Beginner's Course at the end of September. The course will consist of 15-20 classes, targeting a total 60 of HALO staff (there is an option for smaller classes and more courses).

We are looking to hire an organization or individual to conduct this Spoken Sinhala Beginner's Course. The right candidate will be contracted through a short-term service contract agreement to conduct Spoken Sinhala Beginner's Course.

**Requirements of the position:**

- Bachelor's degree / Diploma in Sinhala or Sinhala as a Second Language OR
- Ordinary Level "A" grade for Sinhala or Sinhala as a Second Language OR
- A minimum of 5 years' experience as a Sinhala teacher.
- Ability to plan lessons and keep track of progress.
- Superb verbal and written communication skills in English, Sinhala and Tamil.
- Ability to complete a pre and post course assessment, to measure any improvements in language.
- Good time management skills.
- Effective planning, organization, and problem-solving skills.

All applications must be submitted to the below address no later than Monday 28 August 2023. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**

(CR/40397)AH-1

## நினைவலைகள்

**30ஆம் ஆண்டு** | **26ஆம் ஆண்டு** | **9ஆம் ஆண்டு**



மலர்வு 13 . 02 . 1929 — உதிர்வு 20 . 12 . 1993

**இளையதம்பி கந்தசாமி**
**(திதி: ஸப்தமி)**



மலர்வு 19 . 11 . 1961 — உதிர்வு 30 . 07 . 1997

**மைதிலி கந்தசாமி**
**(திதி: ஏகாதசி)**



மலர்வு 15 . 01 . 1930 — உதிர்வு 09 . 03 . 2014

**கந்தசாமி மங்கையர்க்கரசி**
**(திதி: நவமி)**

காலங்கள் கடந்து கணங்களாகிச் சென்றாலும்
கனவிலும் நினைவிலும் சுமக்கின்றோம் உம்மை
நிஜங்கள் அழிந்தாலும் என்றும் நினைவுகள் அழியாது...

**என்றும் உங்கள் நினைவுகளுடன்...**
**குடும்பத்தினர்.**

ஞானபண்டித பாடசாலை அருகில்
கொக்குவில் மேற்கு.

(CS/25898)AH-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தர கைலாசம் திறப்பு விழா



கீரிமலை முதியோர் ஆச்சிரமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுந்தர கைலாசம் எனும் புதிய கட்டடம் கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.
குறித்த முதியோர் இல்லத்தை அமைப்பதற்கு மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனும் அமெரிக்காவில் மருத்துவ நிபுணராகக் கடமையாற்றும் க.சண்முகசுந்தரமும் அவரது குடும்ப உறுப்பினர்களும் பெருமளவு பங்களிப்பு நல்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ய-66-9)

## ஆடிப்பூர விழாவும் பாற்குடப்பவனியும்



வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் திருக்கோயிலின் ஆடிப் பூர விழாவும் ருத்திரசாந்தி வைபவமும் கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது
விழாவில் 108 சங்காபிஷேக நிகழ்வும் ஆத்மலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து பாற்குடங்கள் பவனியாக எடுத்து வரப்பட்டு அம்பாளுக்கு மஞ்சள் நீராட்டு அபி ஷேகமும் அடியார்களின் திருக்கரங்களால் அம்பாளுக்கு பால் அறுகு வைத்து நீராட்டுவிழாவும் இடம்பெற்றது. (ய-159)



அவுஸ்திரேலியாவில் இயங்கிவரும் மன்னார் எயிட் குழுவின் நிதி அனுசரணையில், மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தால் நாணாட்டான் பிரதேச செயலர் பிரிவில் வசித்து வருகின்ற பொருளாதாரத்தில் நலிவுற்ற 26 குடும்பங்களுக்கு மேற்படி பிரதேச செயலகத்தில் மூன்றாம் கட்டமாகக் கடந்த மாதம் 6ஆம் திகதி வியாழக்கிழமை உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ய)



மக்கள் நலன் பேணும் அமைப்பின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த ஆனி மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. (ய)

## இன்னிசை விருந்தும் கல்வி ஊக்குவிப்பும்



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு வரிசையில் சிறப்பு இன்னிசை விருந்தும் கல்வி ஊக்குவிப்பு உதவி வழங்கலும் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.
ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீட முதலாம் வருட மாணவன் க.கபிநாத் பக்க வாத்திய சகிதம் தெய்வீகப் பாடல்களைப் பாடினார்.
நிகழ்வில் பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பும் சைக்கிள்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ய-66)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஊரெழு கிழக்கு, சுன்னாகத்தை வதிவிடமாக உடைய
**அமிர்தலிங்கம் கௌதமன்**
அவர்களுக்கு கடந்த 26.07.2023 அன்று மிகுந்தலையிலுள்ள இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக தொழில்நுட்பபீடம் வழங்கிய **BET(HONS) First Class Degree In Electrical and Electronic Technology** பட்டம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள்
சிவபூரணி முத்தமிழ் மன்ற
அறநெறிப் பாடசாலை, அறநெறி நூலகம்.

(CS 51609) AH-T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு நினைவிடம்

யாழ்ப்பாணம், ஓக. 11

**நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு நினைவிடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.**

ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பிரதம ஆணையாளர் கலாநிதி கே.ஏ.டி.புண்யதாச பங்கேற்று நினைவிடத்தைத் திரை நீக்கம் செய்தார். சிறப்பு விருந்தினராக ஆசிரியர் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீமா தசநாயக்கா, கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து ஆசிரிய மாணவர்களின் காவடியாட்டம், குதிரையாட்டம், ஒயிலாட்டம் முதலான பாரம்பரியக் கலைவடிவ ஆற்றுகைகள் நிகழ்வைச் சிறப்பித்தன.

அத்துடன் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் மற்றும் பல்கலாசார நடன நிகழ்வுகள் என்பனவும் கோலாகலமாக இடம்பெற்றன. (ச-66-125-27)

## சீரற்ற பேருந்துச் சேவை
## மாணவர் இடைவிலகல் உயர்வு
### சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.11

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் பேருந்துச் சேவைகள் சீரின்மையால் பாடசாலை மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அதனால் மாணவர்கள் இடைவிலகல்களும் அதிகளவில் பதிவாகுகின்றன என சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சிறுவர் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. காரைநகரில் ஊரிப் பகுதிவரை மாத்திரமே பேருந்துச் சேவை இடம்பெறுகிறது. காரைநகர் மருதபுரம் பகுதிக்கு பேருந்துச் சேவை இடம்பெறாமையால் மாணவர்கள் பாடசாலை இடைவிலகல்கள் பதிவாகுகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து புதுக்காடு ஊடாக கட்டைகாடுவரை செல்லும் வழித்தட இலக்கம் 807 பேருந்துச் சேவை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பிரதான போக்குவரத்து சேவையாக காணப்படுகிறது. ஆனால் பேருந்துசேவை ஒழுங்கின்மையால் மாணவர்கள் ஆயிரத்து 500 ரூபா வீதம் செலுத்தி பட்டாரக வாகனம் ஒன்றில் பாடசாலை செல்கின்றார்கள்.

வயாவிளான் 764 வழித்தட பேருந்து சேவை மாணவர்களை ஏற்றுவதில்லை. அதேவேளை தனங்கிளப்பு ஊடாக வருகைதரும் பேருந்துச் சேவைகள் ஒழுங்கின்மையாலும் மாணவர்கள் அந்தரிக்கின்றனர். எனவே பேருந்துச் சேவைகளை ஒழுங்கமைத்து மாணவர்களின் கற்றல் நடவடிக்கை பாதிப்புறுவதைத் தடுக்க வேண்டும் என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பில் இ.போ.ச சாலை சார்பில் கலந்துகொண்ட அதிகாரிகள் தெரிவிக்கையில், காரைநகர் சாலை சார்ந்த விடயப்பரப்புத் தொடர்பில் காரைநகர் சாலை முகாமையாளருக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்போம். மேலும் நாம் 25 பேருந்துகளை கோரிய நிலையில் 5பேருந்துகளே கிடைத்துள்ளன எனக் குறிப்பிட்டார்.

ஏனைய பேருந்துச் சேவைகள் குறித்து தனியார் மற்றும் இ.போ.ச.வினருடனும் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்டச் செயலர் உறுதியளித்தார். (ச-125)

## கண்ணாடிக் கழிவு சேகரிப்பு: கையுறை அணியாத ஊழியர்கள்

கிளிநொச்சி, ஓக. 11

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட பளையில் கழிவுப் பொருள்களைச் சேகரிக்கும் பணியில் சுகாதார ஊழியர்கள் பாதுகாப்புக் கவசங்கள், கையுறைகளை அணியாது பணியாற்றுகின்றனர் என மக்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையினரால் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்குட்பட்ட ஏ-9 வீதியை அண்டிய பகுதிகளிலுள்ள பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றும் பணிகள் கடந்த சில நாள்களாக முன்னெடுக்கப்படுகின்றன. இந்தக் கழிவு அகற்றும் பணியில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் சுகாதார ஊழியர்கள் தமக்கான பாதுகாப்புக் கவசங்கள் ஏதும் இன்றி பணியாற்றுகின்றனர் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச் செயலாளரிடம் இதுதொடர்பில் கேட்டபோது, இதுகுறித்து எந்தவித முறைப்பாடுகளும் இன்னமும் எனக்குக் கிடைக்கவில்லை. தற்போது ஆளுநரின் திட்டத்தின் கீழ் பிளாஸ்ரிக் மற்றும் கண்ணாடிக் கழிவுகள் திரட்டப்படுகின்றன. கழிவகற்றலுக்குத் தேவையான அனைத்துப் பாதுகாப்புக் கவசங்கள், கையுறைகள் தாராளமாக பிரதேசசபையில் உள்ளன. ஒரு சில சுகாதார ஊழியர்களே கையுறை அணியாது பணியாற்றியிருக்கலாம் - என்றார். (ச-125)

## ஆன்மிக அறக்கட்டளை மாங்குளத்தில் உதயம்

மாங்குளம், ஒலுமடுவில் ஆன்மிக அறக்கட்டளையொன்றை நிறுவும் நிகழ்வு ஒலுமடு மம்மில் பிள்ளையார் கோயிலை அண்மித்த பொதுமண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பல்வேறு உத்தியோகத்தர்கள் பங்கேற்று கட்டளை உருவாக்கத்தின் நோக்கங்கள் குறித்து கருத்துரைத்தனர்.

குடிதண்ணீர், சுகாதாரம் ஆகியவற்றின் அவசியம் பற்றி யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர் சிவன் சுதன் விரிவான விளக்கமளித்தார்.

அத்துடன் பிரதேச வாழ் மக்களின் சிறுநீரக நோய் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. தொடர்ந்து பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-ரி2-27)

## கிராஞ்சி – வலைப்பாடு வீதியைச் சீரமையுங்கள்



மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 11

கிராஞ்சி ஊடாக வலைப்பாடு செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி கிராஞ்சி மக்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிராஞ்சி அந்தோனியார் ஆலயத்திலிருந்து பேரணியாக கிராஞ்சி பொதுச்சந்தை வரை சென்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த வீதி பல வருட காலமாக புனரமைப்பின்றியே காணப்படுகிறது. அதனால் இந்த வீதியால் பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டபோதும் இதுவரை சீரமைப்புச் செய்யவில்லை. அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி வீதியைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ச-ரி2-113)

### அத்துமீறிய மீன்பிடி

## 9 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

யாழ்ப்பாணம், ஓக. 11

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 9 பேரையும் நிபந்தனைகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலை செய்துள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

கடந்த 25ஆம் திகதி தமிழ்நாடு இராமநாதபுரத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் இரண்டு படகுகளுடன் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் உள்நுழைந்தமை, மீன்பிடியில் ஈடுபட்டமை மற்றும் இலங்கைக் கடற்பரப்பினுள் தடைசெய்யப்பட்ட மீன்பிடிமுறையான இரட்டை இழுவைமடியைப் பயன்படுத்தி இழுவைப்படகில் மீன்பிடித்தமை ஆகிய 3 குற்றச்சாட்டுகளின் கீழ் நீரியல் வளத்துறை அதிகாரிகளால் அவர்களுக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி ஜே.கஜநிதிபாலன், மீனவர்கள் 9 பேருக்கும் மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஆறு மாதம் என 18 மாத சாதாரண சிறைத்தண்டனை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவு பிறப்பித்தார்.

அதேவேளை மீனவர்களின் இரண்டு படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிசுவொன்றின்...

விசாரணைகளின் அடிப்படையில், உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம் செய்வதற்காக யாழ்ப்பாணம் மாநகரசபையால் பொதுக்குழியொன்று பயன்படுத்தப்பட்டமையும், அதில் சரிவரப் புதைக்கப்படாத சிசுவின் சடலத்தையே நாயொன்று தோண்டி இழுத்து வந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வண்ணார்பண்ணைப் பகுதியில் நேற்று மாலை சிசுவின் உருக்குலைந்த சடலமொன்று (தலைப்பாகமும் அதனுடன் இணைந்த சதைத்துண்டும்) மீட்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். நீதிவான் பார்வையிட்டதைத் தொடர்ந்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

சடலம் விலங்குகளால் கடியுண்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அது யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானப் பகுதியில் உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம் செய்யும் பகுதியில் இருந்து இழுத்து வரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டது.

இதையடுத்து யாழ். மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜா, சட்டத்திய அதிகாரி பிரணவன் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அங்கு சென்று பார்த்தபோது, உரிமை கோரப்படாத சடலங்களைத் தனித்தனியாக அடக்கம் செய்யாமல் பொதுக்கிடங்கு ஒன்றுக்குள் போட்டு அடக்கம் செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் விலங்குகளால் இழுத்துவரப்படும் அளவுக்கு அந்தக் குழி மிகமோசமான - சுகாதாரச் சீர்கேடான பராமரிப்பு நிலையில் இருந்தமையும் கண்டறியப்பட்டது.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆணையாளர், பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர், மயானத்தின் விடயத்துக்குப் பொறுப்பான பணியாளர் (ஓவசியர்) ஆகிய மூவரும் எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளையும் கண்காணிப்புகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125,27)



## வன்னேரிக்குளம் - தேவன்குளம் இணைப்பு வேலைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக. 11

கிளிநொச்சியிலுள்ள வன்னேரிக்குளம்- தேவன்குளம் ஆகியவற்றை இணைக்கும் பணிகள் 300 மில்லியன் ரூபா செலவில் விவசாயத் திட்டத்தின் (சியாப்) கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வன்னேரிக்குளத்தின் கீழ் தற்போது 363 ஏக்கரில் நெற்செய்கை நடைபெறுகிறது. இந்த இரண்டு குளங்களையும் இணைப்பதன் மூலம் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும்.

குறித்த குளங்களை இணைக்கும் வேலைத்திட்டம் 2006ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டநிலையில் போர்ச்சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

இந்தநிலையிலேயே வன்னேரிக்குளத்தின் நீர் திறந்துவிடப்பட்டு இடைநிறுத்தப்பட்ட பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வன்னேரிக்குளத்தின் உவர்ப் பரம்பல் ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரக் கூடிய சாத்தியக்கூறும் காணப்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது. (ச-13)

## 69,113 பேருக்கு...

வறட்சி காரணமாக யாழ். மாவட்டத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 38 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 507 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 956 குடும்பங்களும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 269 குடும்பங்களும் குடிதண்ணீர் தேவை என்று பிரதேச செயலர்கள் ஊடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அவர்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்னும் ஓரிரு தினங்களுக்குள் மழை கிடைக்காத பட்சத்தில் நிலைமை மோசமாகும் என்று யாழ்ப்பாணம் புவியியற்றுறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா உள்ளிட்ட பலரும் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-ஒ.5,125)

## யாழ்ப்பாணத்தில்...

இமையாணன் பகுதியைச் சேர்ந்த சோமசுந்தரம் ஞானமூர்த்தி (வயது - 62) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்றுவிட்டு மீண்டும் வந்து பார்த்தபோது, மேற்படி நபரைக் காணவில்லை என்று தேடியுள்ளனர். இதன்போது அவர் குளியலறைக்குள் விழுந்த நிலையில் காணப்பட்டுள்ளார். அவர் உடனடியாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில், வெப்பத்தினால் குருதி ஓட்டக் குறைவு காரணமாக மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டது. (ம-100)

## பயங்கரவாதத்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சந்தேகநபர்கள் மற்றும் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் என தற்போது 28 ஆயிரத்து 68 கைதிகள் சிறைகளுக்குள் உள்ளனர். இவர்களில் 50.3 வீதமானவர்கள் போதைப்பொருள் குற்றவாளிகள். சில சிறைச்சாலைகளில் போதைப்பொருள் குற்றவாளிகளாக 65 வீதத்துக்கும் அதிகமானோர் உள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் தண்டனை பெறும் இவ்வாறான குற்றவாளிகளுக்கு தண்டைனைகளை வழங்குவது மாத்திரம் போதைப்பொருள் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. இவர்களுக்கு திறன்விருத்தி, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து விடயங்கள் குறித்தும் புனர்வாழ்வளிப்பது அவசியமாகும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலமே அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து விடுதலையானதும் மீண்டும் அதே தவறைச் செய்வதைத் தடுக்க முடியும்.

அரசாங்கம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி அதிகமானவர்களை சிறையில் அடைத்து வருவதாக சிலர் கூறினாலும் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் சுமார் 40 பேரே உள்ளனர் - என்றார். (அ-ம)

## நவீன...

உரிமைகளை நியாயமாகக் கோருகிறோம். இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள 300 கோடி ரூபாவை அரசாங்கம் பெருந்தோட்ட சமூகத்தின் கல்வி முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தோட்ட மக்கள் பின்தள்ளப்பட்ட சமூகமாக இரு நூற்றாண்டு காலமாக வாழ்கிறார்கள் என்பதை சர்வதேச மதிப்பாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. அத்துடன் பெருந்தோட்ட மக்கள் 'நவீன அடிமைத்துவத்தின் அடையாளமாக வாழ்கிறார்கள் என ஐக்கிய நாடுகள் சபையில் அறிக்கையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியாவில் இருந்து தொழில் நிமித்தம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட எமது உறவுகள் கடந்த 200 வருடகாலமாக நலிவுற்ற, உரிமையற்ற சமூகமாகவும், பல துயரங்களையும் அடக்கு முறைகளையும் எதிர்கொள்பவர்களாகவே வாழ்கிறார்கள்.

நவீன அடிமைத்துவத்தில் பெருந்தோட்ட எமது உறவுகள் போஷாக்கின்மை, உணவு பாதுகாப்பின்மை, பாலியல் வன்கொடுமைகள், தொழில் சுரண்டல்கள், பாரபட்சம், குறைவான கூலி, காணி உரிமை மறுப்பு உள்ளிட்ட இன்னோரன்ன பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். காலம் காலமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து நாங்கள் அனுதாபத்தைக் கோரவில்லை, நியாயமான தீர்வினையே கோருகிறோம் - என்றார். (அ-ம)

## டொலரின்...

உள்ளது. கடந்த சில வாரங்களாகவே இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின் விற்பனைப் பெறுமதி 325 ரூபாவைக் கடந்துள்ள நிலையில் நேற்றும் அந்த நிலைமை தொடர்ந்தது. இதன்படி நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவுப் பெறுமதி 313.61 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 326.78 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (அ-ம)

## 21ஆம்...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த 8ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு அமைய, தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி அடங்கிய குழுவினர் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில் நேற்று சம்பவ இடத்துக்குச் சென்றனர். கள ஆய்வுகளைத் தொடர்ந்து, மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பான திட்டங்கள் மற்றும் பாதீடு என்பவற்றை அடுத்த ஒரு வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறு தொல்பொருள் திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டது. இதன்படி 17ஆம் திகதி இந்தத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படும். இதைத் தொடர்ந்து 21ஆம் திகதியன்று அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 21ஆம் திகதியென்பது இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள திகதியே. தொல்பொருள் திணைக்களம் தன் திட்டங்களையும் பாதீட்டையும் நீதிமன்றில் முன்வைக்கும்போது அகழ்வின் திகதி இறுதிசெய்யப்படும். (அ-ம-19)

## முல்லைத்தீவில்...

ஒட்டுசுட்டான் பகுதியில் சில தற்காலிக வீடுகள் மற்றும் கொட்டகைகள் காற்றால் சேதமடைந்துள்ளன. அத்துடன் தென்னைகள் சிலவற்றில் மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது. (அ-ம)

## அதிக மருந்துகள்...

சேர்ந்த இராசா சிவபாதம் (வயது - 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த ஐந்தாம் திகதியன்று வாயில் இருந்து குருதி வெளியேறிய நிலையில், குறித்த நபர் படுக்கையிலிருந்து மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். உயிரிழந்த நபர் கடந்த எட்டு மாதங்களாக உள நோய்க்கு மருந்து பாவித்து வந்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையிலும் அளவுக்கதிகமான மருந்துப் பாவனையே அவரின் இறப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை அழிப்பதற்கு முயன்று இழப்பைத்தான் சந்தித்திருக்கிறீர்கள்

## சிங்களவர்களுக்கு அறிவுரை கூறுகிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஓக. 11

**தமிழ் மக்களை அழித்தொழித்துவிடலாம் என்ற உங்களது நீண்டகால நடவடிக்கைகளில் எவ்வளவு அழிவைச் சந்தித்திருக்கிறீர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்களது தூரப்பார்வையற்ற, தேசப்பற்றற்ற கொள்கைகளும் நடவடிக்கைகளும் முழு இலங்கையையும் மிக மோசமான மீளமுடியாத பொருளாதார சீர்குலைவுக்குள் கொண்டுசென்றுள்ளதை கவனத்தில் கொள்ளுங்கள் - இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், இந்தியாவின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயாராக இல்லாத சூழ்நிலையை இன்று நாம் அவதானிக்கின்றோம்.

பிரதமர்கள், ஜனாதிபதிகள், ஆளும்தரப்புக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் வாக்குகளின்மீது குறிவைத்தார்களே தவிர, அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதில் அவர்களுக்கு எத்தகைய ஆர்வமோ விருப்பமோ இருக்கவில்லை. மாறாக, இன்றும்கூட, சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை வடக்கு - கிழக்கில் நிலைநிறுத்துவதற்கான தொடர்ச்சியான பல்வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்களை நடத்தி வருவதையே நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழிக்கும் உங்கள் நோக்கங்கள் அனைத்தையும் நாங்கள் இறுதிவரை எதிர்ப்போம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்தும் முன்னெடுப்பீர்கள் என்றால் போராட்டகுணம் கொண்ட தமிழ் மக்கள் இறுதிவரை போராடுவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இந்த நாட்டில் ஒரு நிலையான அரசியல் ஸ்திரத்தன்மை வேண்டுமா இல்லையா என்பதை முடிவு செய்யுங்கள் - என்றுள்ளது. (ஒ-100)

## சீனப் போர்க்கப்பல் இலங்கையில் முகாம்

கொழும்பு, ஓக. 11



சீன இராணுவத்தின் போர்க்கப்பலொன்று நேற்றுக்காலை கொழும்பை வந்தடைந்தது என்று சீனக் கடற்படை தெரிவித்துள்ளது.

129 மீற்றர் நீளமான இந்தக் கப்பலில் 138 சீன கடற்படையினர் உள்ளனர். சம்பிரதாயபூர்வ விஜயமாகவே இந்தக் கப்பல் வருகை தந்துள்ளது. கப்பல் 12ஆம் திகதி வரை கொழும்பில் தரித்து நிற்கும் என இலங்கைக் கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்தியப் போர்க்கப்பல் ஒன்று இலங்கையில் முகாமிட்டிருந்தது. அதற்குப் பதிலடியாக சீனப் போர்க்கப்பல் வருகை தந்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. இதேவேளை- கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சீனப் போர்க்கப்பலொன்று வருகை தருவதற்கு இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

# சமய ஒழுக்கக் கல்வியைத் தழுவ மாணவருக்கு ஞாயிறு விடுமுறை

## முல்லை மாவட்டச் செயலர் ஆலோசிப்பு

சமய ஒழுக்கநெறியை மாணவர்கள் பின்பற்ற ஞாயிறு தினங்களில் தனியார் கல்விச் செயற்பாட்டுக்கு விடுமுறையளிக்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். முல்லைத்தீவு பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் சமய, ஒழுக்கக் கல்வியை மேம்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது சமய ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

சமய ஒழுக்கக் கல்வியை வலுப்படுத்த ஞாயிறு தினங்களில் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டைத் தவிர்ப்பதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள் ஆதரவளிக்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் வேண்டுகோள் விடுத்தார்.

இதுதொடர்பில் அவர்களுடன் கலந்தாலோசிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் முல்லைத்தீவு அனைத்துச் சமயங்களையும் பிரதிநிதித்து வப்ப டுத்தும் சமயத்தலைவர்கள், அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள்,

மேலதிக மாவட்டச் செயலர் , பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம கணக்காளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், மாவட்ட, சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச- 27)

### பிரதோஷ பூஜை

வட்டுக்கோட்டைதெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதோதஷ பூஜைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம்வரவுள்ளார். (ம)


**விற்பனைக்கு**

பாவித்த பழைய Lap Top Parts, பாவித்த 20 போன்கவர், போட்டோ பிறின்ற் மிஷின்.

077 199 6117

**கடை வேலைக்கு ஆட்கள் தேவை**

பலசரக்குக் கடை ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

077 628 0685

**பெண் உதவியாளர் தேவை**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பல் மூக்குக் கண்ணாடி ஸ்தாபனத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகொள்ளவேண்டிய இலக்கம்:

074 378 1026, 077 025 9877

**தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புத்தகசாலை ஒன்றுக்கு முழுநேரம் மற்றும் பகுதி நேரம் வேலை செய்வதற்கு 30 வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளைகள் தேவை.

077 046 0367, 077 411 0826


# இரும்புத் திருட்டில் இராஜாங்க அமைச்சர்?

கொழும்பு, ஓக. 11

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இடம்பெறும் இரும்புத் திருட்டுடன் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு தொடர்பு இருக்கின்றது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் செனரத் பெரேரா மற்றும் முன்னாள் தலைவர் காமினி ஏக்கநாயக்க ஆகியோரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலையில் இரும்புகள் களவாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் தான் எந்தவேளையிலும் பொலிஸாரிடம் சரணடையத் தயார் என இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

'நான் சி.ஐ.டியின் முன்னிலையில் செல்வேன். அதன் காரணமாக பொலிஸார் என்னைக் கைதுசெய்யலாம். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கைதுசெய்வதற்கு சபாநாயகரின் அனுமதி தேவை என்பதால் அதனை வழங்குமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொள்கின்றேன்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இராஜாங்க அமைச்சர் சரணடைய முன்வந்துள்ளதால் அவரைக் கைதுசெய்யலாம் என பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்சவும் தெரிவித்துள்ளார். (அ-ம)


# வேலைவாய்ப்பு

1. Graphic Designer (கிராப்பிக் டிசைனர்)
2. Marketing Staff (சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்)



மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (12.08.2023) சனிக்கிழமை மற்றும் (14.08.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... 11.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org